**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 841/2023**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **மதுமிதா** | **Caste** | : |
| **Husband's Name** | : விஜயகுமார் | **Calling** | : **House Wife** |
| **Village** | : **குடியாத்தம் - வேலூர்** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **28** |
| | | **Dated** | : **29.10.2025.** |

**29.10.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி1– திருமதி. **மதுமிதா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் திண்டுக்கல் சீலப்பாடி, இந்த வழக்கு சம்பவத்திதல் இறந்த கண்மனிராஜன் எனது அண்ணன். எனது அண்ணன் நல்லாம்பட்டியில் தனியாக வீடு வாடகைக்கு எடுத்து குடியிருந்து வந்தார். 05.06.2023 ம்

தேதி எனது அண்ணன் எனக்கு போன் செய்து மதிய உணவு அருந்திவிட்டு வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்ததாக சொன்னார். அந்த சமயத்தில் நான் சென்னையில் தனியார் கம்பேனியில் மெடிக்கல் கோடிங் வேலை செய்து வந்தேன். அதன் பின்னர் அன்றைய தினம் மாலை சுமார் 5.30 மணிக்கு சதீஸ்குமார் என்பவர் எனக்கு போன் செய்து எனது அண்ணனுக்கு விபத்து நடந்ததாக சொன்னார். எனது அண்ணன் பஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் தெற்கிருந்து வடக்கு நோக்கி திண்க்கல் – நல்லாம் பட்டி ரோட்டில் அவருக்கு எதிர் திசையில் வடக்கிருந்து தெற்கு நோக்கி வேகமாக ஆரன் அடிக்காமல் வந்த ஆட்டோ எனது அண்ணன் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாக தகவல் சொன்னார். நான் தகவலை எனது தம்பி இந்தியன் என்பவருக்கு போன் மூலமாக தெரிவித்தேன். எனது தம்பி இந்தியம் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்துள்ளார், அங்கு எனது அண்ணன் கண்மனி ராஜன் சச்சின் டீ கடைக்கு முன்பு அடிபட்டு கிடந்துள்ளார். எனது தம்பி இந்தியன் எனது அண்ணனிடம் விசாரித்த போது நெஞ்சு வலிப்பதாகவும் காலில் காயம்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். உடனே எனது தம்பி இந்தியன் எனது அண்ணனை ஆட்டோவில் திண்டுக்கல் அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றுள்ளார். நான் மறுநாள் காலை திண்டுக்கல் வந்து மருத்துவமணையில் இருந்த எனது அண்ணனை பார்த்தேன். அவர் உடல் நிலை மோசமான நிலையில் இருந்தது. பின்னர் 8.06.2023 ம் தேதி காலை 6.30 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரை நான் தான் எழுதினேன். சம்பவத்தை பற்றி சதீஸிடமும், இந்தியனிடமும் கேட்டு தெரிந்து கொண்டு எழுதி கொடுத்தேன். ஆட்டோவை ஓட்டிய நபர் வரதராஜன் என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். புகார் அ.த.சா.ஆ.1. அன்றைய தினம் 11 மணிக்கு எனது அண்ணன் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை–இல்லை</u>

<u>நீதிமன்ற கேள்வி</u>

விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் அதன் பதிவு எண் மற்றும் விபத்து ஏற்படுத்திய நபர் குறித்து நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

ஆட்டோ மோதியதாகவும் வரதராஜன் என்பவர் ஆட்டோ ஓட்டியதாகவும் சொன்னார்கள். வரதராஜனை தெரியாது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.29 16:12:09 +0530

Judicial Magistrate No.I

Dindigul.